# ஒதுக்கீட்டுத் தலைப்பு 106 இடர் முகாமைத்துவ அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களம் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2012 ஆம் ஆண்டு

இந்த அறிக்கை 2 பகுதிகளை உள்ளடக்கியுள்ளது.

1 ஆம் பகுதி - அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் கணக்குகள் தொடர்பான சுருக்கமான அறிக்கை

2 ஆம் பகுதி - ஒவ்வொரு ஒதுக்கீட்டுத் தலைப்புக்குமான விபரமான அறிக்கை

## 1 ஆம் பகுதி

## இடர் முகாமைத்துவ அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் கணக்குகள் மீதான சுருக்கமான அறிக்கை

### 1. அமைச்சின் கீழுள்ள திணைக்களம்

| செலவுத் தலைப்பு | திணைக்களத்தின் பெயர் |
|---|---|
| 304 | வளிமண்டலவியல் திணைக்களம் |

### 2. கணக்குகள்

### 2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### (அ) மொத்த ஏற்பாடும் செலவும்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 1,509,829,395 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை இதில் ரூபா 1,112,572,657 பயன்படுத்தப்பட்டிருந்தது. அதற்கிணங்க நிதி ஏற்பாடுகளிலிருந்தான தேறிய சேமிப்புக்கள் ரூபா 197,185,110 இற்கும் ரூபா 209,071,628 இற்கும் இடைப்பட்ட வீச்சில் அல்லது மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் 20 சதவீத்திற்கும் 37 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டன. விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| ஒதுக்கீட்டுத் தலைப்பு | அமைச்சு/ திணைக்களம் | தேறிய நிதியேற்பாடு | | பயன்பாடு | | சேமிப்பு | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மீண்டு வருபவை | மூலதனம் | மீண்டு வருபவை | மூலதனம் | மீண்டு வருபவை | மூலதனம் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 106 | இடர் முகாமைத்துவ அமைச்சு | 420,160,000 | 555,300,000 | 378,078,867 | 400,196,023 | 42,081,133 | 155,103,977 |
| 304 | வளிமண்டல வியல் திணைக்களம் | 186,250,000 | 348,119,395 | 176,581,716 | 157,716,051 | 9,668,284 | 190,403,344 |
| | மொத்தம் | 606,410,000 | 903,419,395 | 554,660,583 | 557,912,074 | 51,749,417 | 345,507,321 |

## 2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்

### பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்திற்காக அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் பின்பற்றப்பட்டிருந்தன.

| தலைப்பு | விடய இல. | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|---|
| | | அதிகூடிய எல்லை | உள்ளபடி யானவை | ஆகக்குறைந்த எல்லை | உள்ளபடியா னவை | அதிகூடிய எல்லை | உள்ளபடி யானவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 106 | 10601 | 4,200,000 | 1,288,610 | 2,500,000 | 3,117,529 | 16,000,000 | 9,079,147 |
| 304 | 30401 | 15,000,000 | 3,572,989 | 5,500,000 | 8,301,283 | 60,000,000 | 31,441,436 |

## 2.3 பொதுவைப்புக் கணக்கு

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களத்தின் பொதுவைப்புக் கணக்குகளிலுள்ள மீதிகள் ரூபா 19,765,272 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் அது தொடர்பான விபரம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| அமைச்சு/ திணைக்களம் | கணக்கு இல. | 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா |
| இடர் முகாமைத்துவ அமைச்சு | 6000/0000/00/0015/0020/000 | 14,418,188 |
| வளிமண்டலவியல் திணைக்களம் | 6000/0000/00/0015/0159/000 | 5,347,084 |
| மொத்தம் | | 19,765,272 |

## 2 ஆம் பகுதி

## ஒவ்வொரு ஒதுக்கீட்டுத் தலைப்பு தொடர்பான விபரமான அறிக்கை

## 1. ஒதுக்கீட்டுத் தலைப்பு 106 – இடர் முகாமைத்துவ அமைச்சு

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

இடர் முகாமைத்துவ அமைச்சின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 ஆகஸ்ட் 21 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூறறுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

## 1.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் இடர் முகாமைத்துவ அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (ஆ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 இலிருந்து 1.7 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) பதிவேடுகளைப் பேணியிருக்காமை

அமைச்சினால் கீழே காட்டப்பட்டள்ள பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

| பதிவேட்டின் வகை | தொடர்புடைய பிரமாணம் |
|---|---|
| நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 இன் 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| இழப்புக்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு | நி.பி. 110 |

### (ஆ) பாதீட்டு முரண்

(i) 06 செலவின விடயங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 6,200,000 தொகையான நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ii) 11 செலவு விடயங்களுக்கு கூடுதலாக ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது தேறிய நிதி ஏற்பாட்டின் 53 சதவீத்திற்கும் 81 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

## 1.4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 1.4.1 கூட்டிணைந்த திட்டம்

சகல அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவன தலைவர்களிற்கு முகவரியிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிலிருந்து குறைந்தது தொடர்ந்துவரும் 03 ஆண்டுகளிற்காக கூட்டிணைந்த திட்டமொன்று அமைச்சினால் வருடத்தின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத்திட்டம் 2012 திசெம்பர் 31 வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

மேற்படி 1.4.1 இல் குறிப்பிடப்பட்ட அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்திற்கமைய அமைச்சினால் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டமொன்று 2011 திசெம்பர் 31 வரை தயாரிக்கப்படாதிருந்ததுடன் 2012 பெப்ரவரி 02 ஆந் திகதி நிதி ஏற்பாடுகளை பயன்படுத்துவதன் படியான செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்தது.

### 1.4.3 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

மேற்படி 1.4.1 இல் குறிப்பிடப்பட்ட அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட 2002 செப்தம்பர் 12 மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கைகளின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் அமைச்சினால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியொன்றுடன் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட

வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை 2013 யூலை 31 ஆந் திகதி வரை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.4.4 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட்டிருந்த போதிலும் 2012 யூன் மாதம் முதல் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டது. அவ்வாறே சமர்ப்பிக்கப்பட்டிருந்த கணக்காய்வுத் திட்டத்தின் படி உள்ளகக் கணக்காய்வு இடம்பெற்றிருக்கவில்லை.

### 1.4.5 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவச் சபைகளை செயற்படுத்தல்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவச் சபைகளை 03 மாதங்களிற்கு ஒரு முறையேனும் நடாத்தப்பட வேண்டிய போதிலும், 2012 ஆம் ஆண்டில் 02 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன.

## 1.5 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றிற்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| **(அ) நிதிப்பிரமாணங்கள்** | | |
| நி.பி. 104 | 2,194,794 | மீளாய்வாண்டில் அமைச்சிற்குச் சொந்தமான 05 வாகனங்கள் விபத்துக்குள்ளாகியிருந்த போதிலும், ஆரம்ப அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| நி.பி. 1646 | - | ஒவ்வொரு மாதத்திற்குமான வாகனங்களின் நாளாந்த ஓட்டப் பதிவேடுகள் மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் |

| | | |
|---|---|---|
| | | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| நி.பி. 1647 | - | வாகனங்களினதும் அவற்றின் உபகரணங் களினதும் மீதான முழுமையான மெய்மையாய்வு வருடாந்தம் நடாத்தப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான மெய்மையாய்வு நடாத்தப்பட்டிருக்கவில்லை. |

**(ஆ)** பொது நிர்வாகச் சுற்றறிக்கை

| | |
|---|---|
| 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கை | ஒவ்வொரு 06 மாதங்களிற்கு ஒரு முறையும் வாகனங்களின் எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும், அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 1.6 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 ஆம் ஆண்டிற்காக இடர் நிவாரணச் சேவைகள் நிலையத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அறிக்கையின் படி இடர் நிவாரண நிதி ஏற்பாடாக ரூபா 189,215,259 தொகை 25 மாவட்டச் செயலங்களிற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அவ்வேற்பாடுகள் பயன்படுத்தப்பட்ட முறை தொடர்பான விபரமான அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வரட்சியால் பீடிக்கப்பட்ட மக்களிற்கு நிவாரணம் வழங்குவதற்காக இடர் நிவாரணச் சேவைகள் நிலையத்தின் ஏற்பாட்டின் கீழ் தண்ணீர்த் தொட்டிகளைக் கொள்வனவு செய்வதற்காக 2012 ஆம் ஆண்டில் ரூபா 19,520,844 தொகை 20 மாவட்டச் செயலங்களிற்கு வழங்கப்பட்டிருந்தது. அதில் 04 மாவட்டச் செயலங்களினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த தண்ணீர் தொட்டிகளின் எண்ணிக்கை மற்றும் செலவிடப்பட்டிருந்த ரூபா 6,160,000 தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.7 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களும்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 19 | 13 | 06 |
| (ஆ) | மூன்றாம் நிலை | 05 | 02 | 03 |
| (இ) | இரண்டாம் நிலை | 442 | 216 | 226 |
| (ஈ) | ஆரம்ப நிலை | 47 | 31 | 16 |
| | மொத்தம் | 513 | 262 | 251 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 251 வெற்றிடங்களை நிரப்பவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. ஒதுக்கீட்டுத் தலைப்பு 106 – வளிமண்டலவியல் திணைக்களம்

### 2.1 கணக்காய்வின் நோக்கெல்லை

வளிமண்டலவியல் திணைக்களத்தின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2013 ஆகஸ்ட் 22 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள், காண்புகள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லை, பரப்பு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள

பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக் கூடிய வகையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**2.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூறறுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல், நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல், செயற்படுத்துதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்**

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் வளிமண்டலவியல் திணைக்களத்தின் ஒதுக்கீட்டுக் கணக்கும் இணக்கக் கூற்றும் இவ்வறிக்கையின் (அ) தொடக்கம் (இ) வரையான பொது அவதானிப்புக்கள் மற்றும் 2.4 இலிருந்து 2.10 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

**(அ) பதிவேடுகளைப் பேணியிருக்காமை**

திணைக்களத்தினால் கீழே காட்டப்பட்டள்ள பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை.

| **பதிவேட்டின் வகை** | **தொடர்புடைய பிரமாணம்** |
|---|---|
| நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 இன் 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| இழப்புக்கள் மற்றும் சேதங்கள் பதிவேடு | நி.பி. 110 |

**(ஆ) பாதீட்டு முரண்**

04 செலவின விடயங்களுக்கு கூடுதலாக ஏற்பாடு செய்யப்பட்டதன் காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பானது தேறிய நிதி ஏற்பாட்டின் 57 சதவீத்திற்கும் 83 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

30401 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 இல் அறவீடு நிலுவையாகக் காணப்பட்ட மீதிகள் ரூபா 244,246 கூட்டுமொத்தமாக இருந்ததுடன் அந் நிலுவையினை அறவிடுவதற்கு தவறவிடப்பட்டிருந்தது.

## 2.4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 2.4.1 கூட்டிணைந்த திட்டம்

சகல அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி நிறுவன தலைவர்களிற்கு முகவரியிடப்பட்ட 2010 மார்ச் 10 ஆந் திகதிய பீஎப்/ஆர்/2/2/3/5(4) ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் பிரகாரம் 2010 ஆம் ஆண்டிலிருந்து குறைந்தது தொடர்ந்துவரும் 03 ஆண்டுகளிற்காக கூட்டிணைந்த திட்டமொன்று திணைக்களத்தால் வருடத்தின் ஆரம்பத்தில் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் அத்திட்டம் 2012 திசெம்பர் 31 வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

மேற்படி 2.4.1 இல் குறிப்பிடப்பட்ட அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட 2002 செப்தம்பர் 12 மற்றும் 2004 பெப்ரவரி 20 ஆந் திகதிய 402 மற்றும் 402(1) ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கைகளின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் திணைக்களத்தால் தயாரிக்கப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கான பிரதியொன்றுடன் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்குரிய செயலாற்றல் அறிக்கை 2013 யூலை 31 ஆந் திகதி வரை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4.3 உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவச் சபைகளை செயற்படுத்தல்

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவச் சபை தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

**பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டவாறு சில சொத்துக்கள் பயன்படுத்தப்படாது அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்டுக் காணப்பட்டமை கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| சொத்து வகை | அலகுகளின் எண்ணிக்கை | பயன்படுத்தப்படாத அல்லது குறைவாகப் பயன்படுத்திய காலம் |
|---|---|---|
| (அ) வாகனங்கள் | 01 | 03 ஆண்டுகளிற்கு மேல் |
| (ஆ) இயந்திர உபகரணங்கள் | 06 | 03 ஆண்டுகளிற்கு மேல் |
| (இ) இயந்திர உபகரணங்கள் | 01 | 08 ஆண்டுகளிற்கு மேல் |

## 2.6 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மை**

கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றின் ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே தரப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றிற்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை |
|---|---|---|
| | ரூபா | |
| **(அ) தாபன விதிக்கோவை** | | |
| தாபன விதிக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.4, 4.2.5, 4.4.1 மற்றும் 4.5 ஆம் பிரிவுகள் | 234,746 | ஓய்வுபெற்ற, மரணித்த, பதவி வறிதாக்கப்பட்ட மற்றும் அரசாங்க சேவையிலிருந்து கேட்டு விலகிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை |

**(அ) நிதிப்பிரமாணங்கள்**

| | | |
|---|---|---|
| நி.பி. 1646 | - | ஒவ்வொரு மாதத்திற்குமான வாகனங்களின் நாளாந்த ஓட்டப் பதிவேடுகள் மற்றும் மாதாந்த பொழிப்புக்கள் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| நி.பி. 1647 | - | வாகனங்களினதும் அவற்றின் உபகரணங் களினதும் மீதான முழுமையான மெய்மையாய்வு வருடாந்தம் நடாத்தப்பட வேண்டிய போதிலும், அவ்வாறான மெய்மையாய்வு நடாத்தப் பட்டிருக்கவில்லை. |

**(இ)** பொது நிர்வாகச் சுற்றறிக்கை

| | |
|---|---|
| 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க சுற்றறிக்கை | ஒவ்வொரு 06 மாதங்களிற்கு ஒரு முறையும் வாகனங்களின் எரிபொருள் நுகர்வு பரீட்சிக்கப்பட வேண்டிய போதிலும், அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

**2.7 செயலாற்றல்**

**போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான கருமங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நவீன தொழில்நுட்ப முறையில் காலநிலைத் தகவல்களை பெற்றுக்கொள்வதற்கும் அத்தகவல்களை பல்வேறு இணையதளங்களினூடாக குறிப்பிட்ட தொழில்நுட்பப் பிரிவிற்கு அனுப்பிவைக்கும் வசதிகளுடன் கூடிய ‘‘டொப்ளர் ரேடார்’’ முறைமையொன்றைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 320 மில்லியன் தொகையும் அதனைப் பொருத்தும் நடவடிக்கைக்காக ரூபா 374 மில்லியன் தொகையும் செலவிடப்பட்டிருந்தது. இந்த ரேடார் முறைமை 2012 ஆகஸ்ட் மாதத்தில் திணைக்களத்திற்கு கிடைத்திருந்ததுடன் உடன்படிக்கையின் படி 2012 ஆகஸ்ட் மாதமளவில் பொருத்திப் பூரணப்படுத்தப்பட்டிருக்க வேண்டிய போதிலும், 2013 திசெம்பர் 30 ஆந் திகதி வரை பொருத்தும்

நடவடிக்கைகளைப் பூரணப்படுத்தி இயந்திரத்தினைச் செயற்படுத்தி காலநிலைத் தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு தவறவிடப்பட்டிருந்தது.

(ஆ) திணைக்களத்திற்குச் சொந்தமாக 555 மழைவீழ்ச்சி அளவிடல் நிலையங்கள் நாடு பூராவும் காணப்படுவதுடன் 2012 ஆம் ஆண்டில் 17 மாவட்டங்களில் அமையப்பெற்றிருந்த 35 மழைவீழ்ச்சி அளவிடல் நிலையங்களில் மழை வீழ்ச்சி அளவுத் தகவல்கள் கிடைத்திருக்கவில்லை.

## 2.8 இழப்புக்கள் மற்றும் சேதங்கள்

திணைக்களத்திற்குச் சொந்தமான சொத்துக்களிற்கு ஏற்பட்டிருந்த ரூபா 4,432,012 மொத்தமான இழப்புச் சேதங்கள் தொடர்பில் நி.பி. 102 மற்றும் 104 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.9 முகாமைத்துவ பலவீனங்கள்

திணைக்களத்திற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் உள்ளடங்கியிருந்த கணக்காய்வுப் பந்திகள் அரசாங்க கணக்குகள் குழுவினால் பரீட்சிக்கப்பட்டதன் பின்னர் எழுந்த விடயங்கள் தொடர்பில் அரசாங்க கணக்குகள் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பணிப்புரைகளை அதிகாரிகளால் நடைமுறைப்படுத்துவதில் அசமந்த போக்கொன்று காண்பிக்கப்பட்டது. விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான தொடர்பு | | தொடர்புடைய விடயம் | அரசாங்க கணக்குகள் குழுவின் கூட்டத் திகதி | குழுவின் சிபார்சுகள் |
|---|---|---|---|---|
| ஆண்டு | பந்தி இல. | | | |
| 2010 | 2.6 (அ) | இடிமின்னலை கண்டறியும் முறைமை மற்றும் டொப்லர் ரேடார் முறைமையினை துரிதமாக நிறுவுதல் | 2011.06.08 | இடிமின்னலை கண்டறியும் முறைமை மற்றும் டொப்லர் ரேடார் முறைமையினை தாமதமின்றி நிறுவுவதற்கு நடவடிக்கை எடுத்தல் |
| | 2.7 | இழப்புக்கள் மற்றும் சேதங்கள் | | திறைசேரியிடமிருந்து அங்கீகாரத்தினைப் பெற்று இழப்புக்கள் மற்றும் சேதங்களைப் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் |

## 2.10 மனிதவள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் வெற்றிடங்களும்

2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட நிலை | 52 | 32 | 20 |
| (ஆ) | மூன்றாம் நிலை | 29 | 03 | 26 |
| (இ) | இரண்டாம் நிலை | 238 | 170 | 68 |
| (ஈ) | ஆரம்ப நிலை | 140 | 72 | 68 |
| | மொத்தம் | 459 | 277 | 182 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 182 வெற்றிடங்களை நிரப்பவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.